# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| HMOP.No. 57 /2023 | Date : 30.04.2026 | PW 1 |
|---|---|---|
| Name: குமார் | த/பெ.கணேசன் | |

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிர்மனுதாரர் மீது சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் விவாகரத்து வேண்டும் என்பதற்காகவே எதிர்மனுதாரா மீதுஉண்மையில்லாத தேவையற்ற குற்றச்சாட்டுக்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான்தான் எதிர்மனுதாரரை அடித்து உதைத்து துன்புறுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் எதிர்மனுதாரரை உடலளவிலும் மனதளவிலும் துன்புறுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் 5 பவுன் நகை என்னிடம் தான் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்வசம் தான் உள்ளது. என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மீது நான் சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்களை வலியுறுத்தாமல் விவாகரத்து வழங்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

ஒம்/—குமார்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.